(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி

பி.ப. 2-00

(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் 12–7–71 திங்கட் கிழமையன்று காலை 9 மணி யளவில் கூடும்.

பி.ப. 2-01

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS